





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 08.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் மூலம், தமிழகத்தில் முதன்முறையாக **சேலத்தில் டிஜிட்டல் நூலகம்** அமைக்கப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தின் ஆட்சியர் **ரோஹினி டிஜிட்டல் நூலகத்தை** தொடங்கி வைத்துள்ளார்.
    - இதன் மூலம் ஏழை கிராமப்புற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களுக்கான படிப்பு மற்றும் தொழில் சம்பந்தமான சந்தேகங்களை அறிந்து கொள்ள முடியும்.

## இந்திய நிகழ்வுகள்

- உத்திரப் பிரதேச மாநிலத்தின் **பைசாபாத்** என்னும் மாவட்டத்தின் பெயரை **அயோத்தி** எனப் பெயர் மாற்றம் செய்யவுள்ளதாக அம்மாநில முதல்வர் **யோகி ஆதித்யநாத்** அறிவித்துள்ளார்.
    - முன்னதாக உத்திரப் பிரதேசத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான **அலகாபாத்தின் பெயரை, பிரயக்ராஜ் என மாற்றியது** குறிப்பிடத்தக்கது.

- மத்திய அமைச்சரவைக்கு, **ரஷ்யாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகிய இரண்டு உடன்படிக்கைகள்** பற்றி விளக்கப்பட்டது.
    - போக்குவரத்துப் பயிற்சிக்கான ஒத்துழைப்பை மேம்படுத்திய ரஷ்யக் கூட்டமைப்பின் போக்குவரத்து துறை அமைச்சகத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை.
    - இரயில்வேத் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்திட கூட்டுப் பங்கு நிறுவனமான ரஷ்யாவின் இரயில்வேத் துறையுடன் ஒரு ஒத்துழைப்பு ஒப்பந்தம்.

- பிபிசியின் (**BBC**) **100 சிறந்த அயல்நாட்டு மொழித் திரைப்படங்கள்** பட்டியலில் சத்ய ஜித்ரேயின் புகழ்பெற்ற காவியமான **"பதேர் பாஞ்சாலி"** என்ற திரைப்படம் சேர்க்கப்பட்டுள்ளது.
    - இந்தப் பட்டியலில் இடம்பெறும் ஒரே இந்தியத் திரைப்படம் "பதேர் பாஞ்சாலி" ஆகும். இப்படமானது இப்பட்டியலில் **15வது இடத்தில்** உள்ளது.
    - இந்த பட்டியலில் **அகிரா குரோசேவாவின் "செவன் சாமுராய்" முதலிடத்தில்** உள்ளது.

# உலக நிகழ்வுகள்

- அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையில் முதல் முறையாக ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்காவிற்கு குடியேறிய, 27 வயதான **"சபியா யாசிர்"** என்ற பெண் ஒருவர் இடம் பெற உள்ளார்.
    - இதன் மூலம் அமெரிக்காவின் சபையில் இடம்பெறும் முதல் அகதி என்னும் பெருமையை **"சபியா யாசிர்"** பெற்றுள்ளார்.

- **ஐக்கிய நாடுகள் சபையின்** தபால் சேவைத் துறையானது, தீபாவளியை சிறப்பிக்கும் வகையில் அமெரிக்க பணமான **1 டாலர் 15 சென்ட் மதிப்பிலான தீபங்களுடன் கூடிய முதல் தபால்தலை** வரிசையை வெளியிட்டுள்ளது.

We Shine Academy TM

# விருதுகள்

- தேசிய அளவில் இதழியல் பிரிவில் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு பல்வேறு விருதுகளை **பிரஸ்கவுன்சில் ஆப் இந்தியா** வழங்கி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான விருதுகளை அளித்துள்ளது.
    - **2018ம்** ஆண்டுக்கான **இராஜா ராம் மோகன்ராய்** விருதுக்கு மூத்த பத்திரிக்கையாளரும், **'இந்து'** வெளியீட்டு குழுமத்தின் தலைவரான **என்.ராம் தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.

- எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த முதல் இந்திய மாற்றுத் திறனாளி பெண்ணான **'அருணிமா சின்ஹாவிற்கு'** பிரிட்டனில் உள்ள **ஸ்ட்ராத்கிளைட் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி** கௌரவித்துள்ளது.
- குறிப்பு:
    - கடந்த **2013ம் ஆண்டு மே 21ம் தேதி,** உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்டின் உச்சியை (**8848 மீட்டர்**) அடைந்து சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முக்கிய தினங்கள்

- **உலக சைவ உணவுப்பழக்க தினம் (World Vegan Day) - நவம்பர் 1**
    - தனிநபர்களுக்கு சைவ உணவுப் பழக்க வாழ்க்கை முறையை பற்றியும், சைவ உணவுப் பழக்கத்தின் மதிப்பு மற்றும் சைவ உணவிற்கு மாறுவதன் மூலம் அடையும் பயன்களை நினைவு கூறுவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 1ம் தேதி சைவ உணவுப் பழக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது.
    - இத்தினமானது 1994ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

We Shine Academy™